பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2052)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 03 ஞாயிற்றுக்கிழமை (17-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 188

## ஜனாதிபதியுடனான பேச்சில் திருப்தியில்லை
# ஆட்சியை மாற்றியமைக்க
# முஸ்லிம் காங்கிரஸ் தயார்!

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

(நமது நிருபர்)

சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸின் கோரிக்கைகளுக்கு ஐக்கியதேசியக் கட்சி நல்லசமிக்ஞையைக் காட்டுமானால் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் இருந்து வெளியேறத் தயாராக இருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக நேற்றுக் காலை செய்தியாளர் மாநாடு ஒன்றை ஹோட்டல் சலச்ஸியில் அமைச்சர் ரவூப்ஹக்கீம் நடாத்தியிருந்தார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரவூப்ஹக்கீம் பேசும்போதே மேற்கண்டவாறு தெரித்துள்ளார்.

அம்மாகாநாட்டில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரசுக்கும் இடையிலான நல்லுறவுகள் சீரான முறையில் இல்லையென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் நேற்றிரவு தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

### புலிகள் தாக்கி படையினர் இருவர் பலி

மணலாறுப் பகுதியில் உள்ள இராணுவமுகாம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நேற்று நடத்திய தாக்குதலில் இரண்டு படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

கனரக வாகனத்துக்குப் பாதுகாப்பு வழங்கிக்கொண்டிருந்த வேளையிலேயே இராணுவத்தினர் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலின் போது மேலும் இரண்டு படையினர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. [ந-8]

## கன்னாதிட்டிப் பகுதியில் இளைஞர்கள் அட்டகாசம்!

### தடுக்க பொலிஸ்அதிகாரி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதிப்பகுதியில் சனி, ஞாயிறு தினங்களில்இளைஞர்கள் புரிந்துவரும் அட்டகாசங்கள் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரியிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்பொலிஸ்நிலையத்தில் நேற்றுமேற்படிபகுதியிலுள்ள நகைக்கடை உரிமையாளர்களுடனான சந்திப் பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பில் சனி, ஞாயிறு தினங்களில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வரும்மாணவிகள் இப்பகுதியில் குழுமிநிற்கும் இளைஞர்களால் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்து நகைக்கடை உரிமையாளர்களால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது

இதனை செவிமடுத்த பொலிஸ் அதிகாரி இளைஞர்களின் அடாவடித்தனங்களைநிறுத்த உடன் நடவடிக்கை எடுப்பதென உறுதியளித்தார்.

(உ-10-6)

## யாழ். மாநகரசபை தொழிலாளர் நேற்று முதல் வேலை நிறுத்தம்

### சுத்திகரிப்பு பணிகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீட்டுவசதி, தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குதல், ஓய்வூதியத்தை உடன் வழங்குதல போன்ற கோரிக்கைகளை முன் வைத்தே இப் போராட்டம் நடைபெறுகிறது. சுமார் 300 தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளதால் மாநகர சுத்திகரிப்புப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இப போரட்டம் நாளை திங்கட் கிழமையும் தொடருமென ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (ந-10)

## 60 வயதிற்குப் பின்னர் சேவை நீடிப்பு இல்லை

### அமைச்சர் பத்திரன அறிவிப்பு

(கொழும்பு)

அறுபது வயதைத் தாண்டிய அரசாங்கஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவதில்லை என அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

அறுபது வயதுக்கு மேற்பட்ட அரச ஊழியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்குவதினால் கனிஷ்ட ஊழியர்களின் பதவியுயர்வுகள் முடக்கப்பட்டுவிடுவதாகத் தெரிவித்த அமைச்சர் ரிச்சர்ட்பத்திரனா வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் விசேட வைத்திய நிபுணர்கள், தாதிமார், துணை மருத்துவர்கள் விசேட பொறியியலாளர்களுக்கு இச்சட்டம் பொருந்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சுத்தத்தை பேணவுதவுமாறு யாழ். மாநகரசபையின் ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் தொழிலாளர்கள் நேற்று முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பொதுமக்கள் வீடுகளில் சேரும் குப்பைகளை வீதிகளில் கொட்டாமல் தத்தம் காணிகளில் புதைத்தோ அல்லது எரித்தோ மாநகரத்தின் சுத்தத்தைப்பேண உதவுமாறு யாழ்.மாநகரசபையின் பதில் ஆணையாளர் சி.வே.குலநாயகம் அவசர வேண்டுகோள் ஒன்றை பொதுமக்களிடம் விடுத்துள்ளார்.

இதேவேளை தற்காலிக தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதற்கான விண்ணப்பமும்கோரப்பட்டுள்ளது. (ந)

## பஸ் விபத்தில் 22பேர் காயம்

(கொழும்பு)

பொலநறுவை – ஹபரண வீதியில் 3 வது மைல் கல்லருகே பஸ் ஒன்றுவிபத்துக்குள்

(8ம் பக்கம் பார்க்க)

## ஜோர்தான் சென்ற தமிழ்ப்பெண் மர்மமரணம்

(கொழும்பு)

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து ஜோர்தானிற்கு பணிப்பெண்ணாகச் சென்ற இளம் பெண் அங்கு சென்று ஏழு நாட்களில் மர்மமான முறையில் மரணமாகியுள்ளார்.

சுக்கிரீவன் யோகராணி (வயது-19) என்ற பெண்ணே இவ்வாறு மர்மமான முறையில் மரணமானவராவார்.

இவர்கடந்த முதலாந்திகதி பணிப்பெண்ணாக ஜோர்தான் சென்றார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் உத்தேச அரசியல் யாப்பிற்கு இரு கட்சிகள் ஆதரவு

(கொழும்பு)

உத்தேச புதிய அரசியல் யாப்பை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா எடுத்த முடிவை லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியும் பாராட்டியுள்ளன.

இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகள் கடைப்பிடிக்கும் விடாப்பிடியான போக்கை முறியடிப்பதற்கான ஒரே மார்க்கம் இதுவே என்றும் அவ்விருகட்சிகளும் கருத்து வெளியிட்டுள்ளன.

உத்தேச அரசியல் யாப்பு சமர்ப்பிப்பது தொடர்பாக கருத்துக்கூறிய அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக்கட்சியும், பொதுசன ஐக்கிய முன்னணியும் ஒரு பொதுவான கொள்கையின் கீழ் அணுகுமுறை ஒன்றைக் கடைபபிடிததால் விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டைத் தளர்த்தக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (வ)

### இலங்கை இனப்பிரச்சினை விவகாரம்
## பொதுநலவாய நாடுகளின் மகாநாட்டில் ஆராயப்படும்

### ஜோசப் எம்பிக்கு ஆணைக்குழுத் தலைவர் அறிவிப்பு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் இலங்கையின் இனப்பிரச்சினையை ஆராய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அவுஸ்திரேலிய முன்னாள் சட்டமா அதிபரும் சர்வதேச சட்ட வல்லுநர் ஆணைக்குழுவின் அவுஸ்திரேலிய பிரிவுத்தலைவருமான நீதியரசர் ஜோன் டைவேர்ஸ் யோசப் பரராஜசிங்கம் எம்.பிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்த மட்டக்களப்பு மாவட்ட தமிழர்விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் இலங்கையின் இனப்பிரச்சினை வடகிழக்கு மாகாண தமிழ் மக்கள் நிலவரம் குறித்து நீதியரசர் யோன் டைவேற்சுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### நேற்று வியாழ மாற்றம்

திருக்கணிதப்படி நேற்று (16-06-2001) வியாழ மாற்றம் வாக்கியப்படி 13-6-2001 வியாழ மாற்றம் எல்லா இராசி பலன்களுக்கும் விலை ரூ 10/- பூபாலசிங்கம், மக்மிலன் புத்தகசாலைகளில் விற்பனையாகின்றன. கணிப்பாசிரியர் சத்யா ஆனைக்கோட்டை.
(3260)

### கும்பாபிஷேகம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி நாவலடி ஸ்ரீ மகா முத்துமாரியம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேகம் எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. [உ 49]

## இராசி பலன்

17.6.2001

(ஆனி 3 ஞாயிறு)

ஏகாதசி. மு இ 9 58 வரை
அச்சுவினி மு. இ 7.40 வரை
ராகுகாலம் 4. 23- 5. 53
நல்ல நேரம் 8. 53 - 10. 23
சித்தம், ஏகாதசி விரதம்

**மேடம்**
கற்பனைமிகுதி, நண்பர்கள் உதவி, விருந்துபசாரம், முயற்சி ஜெயம்.

**இடபம்**
காரிய அலைச்சல், சுப செலவு. நித்திரைக்குறைவு, மனக்கிலேசம்.

**மிதுனம்**
தனலாபம், கௌரவம், குடும்ப நன்மை, காரியம் கைகூடும்.

**கடகம்**
தொழில் மேன்மை, முயற்சி கைகூடும, சுப நிகழ்வு, அதிகாரம்.

**சிங்கம்**
தர்மம் செய்தல், பிரயாணம், புதிய திட்டம், கட்டுப்பாடு.

**கன்னி**
வீண் பிரச்சினை, முயற்சி தடங்கல், வியாதி ஏற்படல், அச்சம்.

**துலாம்**
போசனசுகம், களஸ்திர சுகம், தனவரவு, சினேகிதர் சந்திப்பு.

**விருச்சிகம்**
நோய்குணமடைதல், தொழில் விருத்தி, திடீர் ப்பயணம், மனமகிழ்ச்சி.

**தனுசு**
தாழ்வு நிலை, வியாபார மேன்மை, பிரயாணக் தடங்கல், முயற்சி தாமதம்.

**மகரம்**
பயந்த சுபாவம், அற்பர் நேசம், நம்பிக்கைக்குறைவு, தாய்வழிஉறவு.

**கும்பம்**
அதிகாரம், அந்நியர் சந்திப்பு, தனவரவு, இனிய சம்பவம்.

**மீனம்**
வீண்விவாதம், தனவிரயம், மதிப்புக்குறைவு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒருதொகுதி வீடுகள் விரைவில் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கு நிரந்தரமான வீடுகள் அமைத்து மீளக் குடியமர வைக்கும் திட்டத்தின் கீழ் மேலும் ஒரு தொகுதி வீடுகள் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு இம் மாத இறுதியில் வழங்கப்படவுள்ளன

இதன்படி, வவுனியாவைச் சேர்ந்த 270 குடும்பங்களுக்குரிய வீடுகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் 25 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் இந்த வீடமைப்புத் திட்டம் மேற்கொளளப்படுகின்றது.

இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீளக்குடியமர வைக்கும் இத் திட்டத்தின் ழ், ஏற்கனவே 212 வீடுகள் ட்டிமுடிக்கப்பட்டுவவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களிலிருந்துஇடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாங்களில் வாழ்ந்து வந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ

## அதிபர்கள் கூட்டம்

கோப்பாய்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பி. ப 2. 00 மணியளவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில நடைபெறவுள்ளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. சிவஞானசுந்தரம் தெரிவித்தார்; உ-79)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூன மாதம்15 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி. வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகிறது.

### சங்கானை

| | |
|---|---|
| 185074 ஏ | 185074 பி |
| 186857 ஏ | 186857 பி |
| 188734 ஏ | 188734 பி |
| 188734 சி | 188775 ஏ |
| 189322 ஏ | 190587 ஏ |
| 190657 ஏ | 190657 பி |
| 190657 சி | 190662 ஏ |
| 190662 பி | 191762 ஏ |
| 191792 ஏ | 191809 ஏ |
| 191892 ஏ | 191911 ஏ |
| 191917 ஏ | 191917 பி |
| 191917 சி | 192031 ஏ |
| 192219 ஏ | 192219 பி |
| 192291 ஏ | 192414 ஏ |
| 192414 பி | 192466 ஏ |
| 192466 பி | 192466 சி |
| 192466 டி | 193514 ஏ |
| 193517 ஏ | 193618 ஏ |
| 193672 ஏ | 193672 பி |
| 193672 சி | 193686 ஏ |
| 193686 பி | 193686 சி |
| 193686 டி | 193686 ஈ |
| 193775 ஏ | 194218 ஏ |
| 194304 ஏ | 194332 ஏ |
| 194333 ஏ | 194333 பி |
| 194334 ஏ | 194355 ஏ |
| 194355 பி | 194355 சி |
| 194482 ஏ | 194482 பி |
| 194890 ஏ | 194890 பி |
| 194909 ஏ | 194909 பி |
| 194982 ஏ | 194984 ஏ |
| 195027 ஏ | 195027 பி |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 192290 ஏ | 192290 பி |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 164889 ஏ | 164890 ஏ |
| 161890 பி | 164890 சி |
| 164891 ஏ | 164892 ஏ |
| 164892 பி | 164893 ஏ |
| 164895 ஏ | 194895 பி |
| 164895 சி | 164896 ஏ |
| 164905 ஏ | 164905 பி |
| 164908 ஏ | 164908 பி |
| 164914 ஏ | 161915 ஏ |
| 164916 ஏ | 164920 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 191815 ஏ | 191815 பி |
| 191868 ஏ | 191996 ஏ |
| 192336 ஏ | 192440 ஏ |
| 192441 ஏ | 192441 பி |
| 192465 ஏ | 192465 பி |
| 193502 ஏ | 193502 பி |
| 193519 ஏ | 193703 ஏ |
| 193703 பி | 193703 சி |
| 193787 ஏ | 193787 பி |
| 193787 சி | 194244 ஏ |
| 194244 பி | 194245 ஏ |
| 194246 ஏ | 194293 ஏ |
| 194393 பி | 194307 ஏ |
| 194307 பி | 194406 ஏ |
| 194412 ஏ | 194412 பி |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 174795 ஏ | 181753 ஏ |
| 182609 ஏ | 182641 ஏ |
| 182698 ஏ | 182698 பி |
| 184965 ஏ | 184967 ஏ |
| 184967 பி | 184967 சி |
| 184967 டி | 186736 ஏ |
| 186804 ஏ | 186804 பி |

| | |
|---|---|
| 186975 ஏ | 186976 ஏ |
| 186977 ஏ | 189589 ஏ |
| 190603 ஏ | 190603 பி |
| 191753 பி | 191771 ஏ |
| 191783 ஏ | 191783 பி |
| 191862 ஏ | 191986 ஏ |
| 191986 பி | 192201 ஏ |
| 192227 ஏ | 192355 ஏ |
| 192357 ஏ | 192396 ஏ |
| 192396 பி | 192489 ஏ |
| 192490 ஏ | 193584 ஏ |
| 193625 ஏ | 193626 ஏ |
| 193626 பி | 193626 சி |
| 193638 ஏ | 193638 பி |
| 193671 ஏ | 193671 பி |
| 193693 ஏ | 193706 ஏ |
| 193736 ஏ | 163136 பி |
| 193737 ஏ | 193764 ஏ |
| 193764 பி | 193771 ஏ |
| 193774 ஏ | 194201 ஏ |
| 194286 ஏ | 194301 ஏ |
| 194301 பி | 194301 சி |
| 194301 டி | 194301 ஈ |
| 194354 ஏ | 194385 ஏ |
| 194401 ஏ | 194405 ஏ |
| 194426 ஏ | 194427 ஏ |
| 194466 ஏ | 194490 ஏ |
| 194490 பி | 194490 சி |
| 194490 டி | 194858 ஏ |
| 194858 பி | 194865 ஏ |
| 194904 ஏ | 195072 ஏ |
| 195847 ஏ | 19586- ஏ |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 175134 ஏ | 183464 ஏ |
| 191990 ஏ | 191990 பி |
| 192257 ஏ | 192267 ஏ |
| 192267 பி | 192267 சி |
| 192267 டி | 192267 ஈ |
| 192320 ஏ | 192320 பி |
| 193500 ஏ | 193500 பி |
| 193500 சி | 193620 ஏ |
| 193620 பி | 193621 ஏ |
| 193683 ஏ | 193683 பி |
| 193710 ஏ | 193710 பி |
| 193748 ஏ | 194236 ஏ |
| 194236 பி | 194259 ஏ |
| 194259 பி | 194302 ஏ |
| 194302 பி | 194302 சி |
| 194403 ஏ | 194955 ஏ |
| 194955 பி | 195038 ஏ |
| 195039 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 176525 ஏ | 182644 ஏ |
| 183204 ஏ | 190697 ஏ |
| 190697 பி | 190698 ஏ |
| 190698 பி | 192306 ஏ |
| 192324 ஏ | 192324 பி |
| 192350 ஏ | 192350 பி |
| 192350 சி | 192350 டி |
| 192363 ஏ | 192437 ஏ |
| 192427 பி | 192482 ஏ |
| 192582 பி | 192482 சி |
| 192484 ஏ | 192549 ஏ |
| 192549 பி | 193594 ஏ |
| 193594 பி | 193610 ஏ |
| 193611 ஏ | 193611 பி |
| 193627 ஏ | 193633 ஏ |
| 193635 ஏ | 193635 பி |
| 193676 ஏ | 193676 பி |
| 193714 ஏ | 196229 ஏ |
| 194287 ஏ | 194295 ஏ |
| 194295 பி | 194342 ஏ |
| 194363 ஏ | 194363 பி |
| 194418 ஏ | 194418 பி |
| 194859 ஏ | 194896 ஏ |
| 194907 ஏ | 195004 ஏ |
| 195092 ஏ | 195092 பி |


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட அரையாண்டுப்பரீட்சைகள்
கல்வியாண்டு 2000/2001

முகாமைத்துவக்கற்கைகள்வணிகபீடத்தின் பின்வரும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் மாணவரிடம் இருந்து 27-06-2001 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

1) முதலாம்வருடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை
2) முதலாம்வருடத்தின் முதலாம்அரையாண்டுப் பரீட்சை [விசேட பரீட்சை]
3) இரண்டாம் வருடத்தின்இரண்டாம்அரையாண்டுப் பரீட்சை

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர்ஒருபாடத்துக்கு ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள்வங்கிக் கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை 20-06-2001 ஆம் திகதி முதல் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்திலிருந்துபெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவாளர்.

[கி-2115]



திருநெறிய தமிழ் மறைக் கழகம்
இணுவில்
ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோயில்
பண்ணிசைப் போட்டி-2001

பரிசளிப்பு விழா

காலம்: 17-06 2001 இன்று பி. ப. 3.30 மணி
இடம்: இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் தேவஸ்தான மண்டபம்.
குறிப்பு:- பரிசில்கள் பெறும் மாணவர்கள் தவறாது சமுகம் கொடுக்கவும்.

திருநெறிய தமிழ் மறைக் கழகம்.

(கி-2118)



பொது மக்களுக்கு
யாழ். மாநகர சபை விடுக்கும் பணிவான வேண்டுகோள்

யாழ்ப்பாண மாநகர சபையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் நியாயமற்ற கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமையினால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. நிர்வாகத்தினால் மாற்று நடவடிக்கை எடுக்கும் வரை பொது மக்களாகிய நீங்கள் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி சழிவுப் பொருட்களை வீதிகளில் வீசுவதைத் தவிர்த்து தங்கள் காணிகளுக்குள் புதைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

பொது மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்காக மனம் வருந்துகின்றோம்.

சி. வே. குலநாயகம்
பதில் ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16-06-2001

(கி/2116)



யாழ்ப்பாண மாநகரசபை
பதில் சுகாதாரத் தொழிலாளி பதவி

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சை நாளை 18. 06. 2001 ஆந் திகதி திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு இவ் வலுவலகத்தில் நடைபெறும்.

கல்வித்தகைமைகள்: 5ம் வகுப்பில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

வயதெல்லை: 18-45

சம்பளம்: நாளொன்றுக்கு ரூபா 131/- அங்கீகரிக்கப்பட்டபடிகளும் வழங்கப்படும்.

இப் பதவி பதில் அடிப்படையில் அமைவதுடன், ஒரு நாள் அறிவித்தலுடன் நீக்கக் கூடியதொன்றாகும்;

ஏற்கனவே சேவையிலிருந்து இளைப்பாறியவர்களது விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்படும். சுயவிபரங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடனும், பிறப்பத்தாட்சிப் பத்திரங்களுடனும் அன்றைய தினம் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சி. வே. குலநாயகம்
பதில் மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்
16. 06. 2001

(கி-2117)

## புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் மகேஸ்வரன் எம்.பி. மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது எமது கடமை

### பிரதியமைச்சர் ரீ.பி. எக்கநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.தே.க. எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவுக்கெதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு அரசதரப்பு எம்.பிக்கள் ஆயத்தமாகி வருகின்றனர்.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'குளோபல் ஸ்பை' என்னும் சஞ்சிகையில் இவர் விடுதலைப்புலிகளின் உளவாளி என்று தெரிவிக்கப்பட்டதை மையமாக வைத்தே இந்த எதிர்ப்பு உருவாகியுள்ளது.

2001 ஆம் ஆண்டு யூனில் வெளியாகியுள்ள இந்த அமெரிக்கச் சஞ்சிகையில் உளவாளிகள் பற்றிய இரகசியங்கள் என்ற கட்டுரையில் பொட்டு அம்மான், தமிழ்ச்செல்வன், அன்ரன் பாலசிங்கம், லோறன்ஸ் திலகர், வசந்தராஜா, விஜயமான்ன ஆகியோரின் பெயர்களுடன் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் பெயரும் குறிப்படப்பட்டிருந்தது.

புலிகளுக்கு உடந்தையாக செயற்படுபவர்களுக்கு 7 ஆண்டுகளுக்கு குடியியல் உரிமைகள் பறிக்கப்படுவதுடன், அசையும், அசையாச் சொத்துக்கள் பறிக்கப்படலாம் என்று தெரிவித்த பிரதியமைச்சர் ரி.பி. எக்கநாயக்கா,

ஐ.தே.க.யின் எம்.பிக்களான பொ. சந்திரசேகரம், ரி மகேஸ்வரன் ஆகியோரும் புலிகளின் அனுதாபிகளே. எம பிகளுக்கிருக்கும் சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி இவர்கள் பயங்கரவாத இயக்கமொன்றிற்கு ஆதரவு தெரிவித்து வருகிறார்கள்:

இத்தகையவர்களுக்கெதிராகவும் நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டுவருவது எமது கடமையாகும் என்றும் தெரிவித்தார். (உ)

## விண்ணப்ப முடிவுத்திகதி நீடிப்பு

(கொழும்பு)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் 1, 2 உடைய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண்தடைப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 29 – ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை அரச வர்த்தமானியில் அறிவிக்கப் பட்டுள்ளது: [செ]

## வறிய மாணவர்களுக்கு பாடசாலைச் சீருடைகள்

(உடுவில்)

வலி தெற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 30 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 3 வறிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறுவர் பாதுகாப்புநிதியத்தினால் இலவசப் பாடசாலைச் சீருடைகளும் உபகரணங்களும் அண்மையில் வழங்கப்பட்டன.

இம் மாணவர்களில் பார்வைக்குறைபாடு உள்ளவர்களின் விபரம் சேகரிக்கப்பட்டு, அவர்களுக்கு விரைவில் மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. (உ-129)

## கள்வரின் கைவரிசை கள்ளுத் தவறணையில்

(கோப்பாய்)

இருபாலைப் பகுதி கள்ளுத் தவறணையில் கள்வர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்தவேளை, மேற்படி கள்ளுத் தவறணையை உடைத்து உட்புகுந்த கள்வர்கள் பணம் ஏதும் இல்லாததால் ஏமாற்றமடைந்து,

ஆத்திரத்தில் அங்கிருந்த 50 லீற்றர் வரையான கள்ளை நிலத்தில் ஊற்றியும், பாத்திரங்களைச் சேதப்படுத்தியும் விட்டுச் சென்றுள்ளனர். (உ-79)

## இலங்கையில் புவிச்சரிதவியல் தகவல் பிரிவு அமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது தடவையாக புவிச் சரிதவியல் தகவல் பிரிவு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

புவிச்சரிதவியல் தொடர்பான தரவுகளை ஆவணப்படுத்தல், ஆய்வு செய்தல், திரட்டுதல் ஆகிய பணிகள் இந்தப் பிரிவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

காணிப் பயன்பாடு, முகாமைத்துவம் என்பன தொடர்பாக சம்பந்தப்பட்ட விபரங்களை இதன் மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று விவசாய அமைச்சின் செயலாளர் சந்திரவிக்கிரம ஆராய்ச்சி தெரிவித்துள்ளார். (செ)

## பயணம் மேற்கொள்ளாது திரும்பியவர்களுக்கு பயணத்தில் முன்னுரிமை

[யாழ்ப்பாணம்]

கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பலுக்காக தெல்லிப்பழை வரை சென்று, பயணத்தை மேற்கொள்ளாது திரும்பிய பயணிகளுக்கு 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பலில் பயணம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும் எனவும்,

இவர்கள் பயணம் மேற்கொள்ளாதவிடத்து பயணச்சீட்டுக்கான பெறுமதி திருப்பி வழங்கப்படும் எனவும்,

இது தொடர்பாக நாளை தொடர்பு கொள்ளுமாறும் றான் அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை 19 ஆம் திகதி கப்பலில் பயணம் செய்ப 14 ஆம் திகதி பதிவினை மேற்கொண்டவர்களுக்கே பயணச்சீட்டு வழங்கப்படும்.

19 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு 20 ஆம் திகதியும், 21 ஆம் திகதி பதிவினை மேற்கொள்பவர்களுக்கு 25 ஆம் திகதியும் பயணச் சீட்டு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## கைதடியில் சிரமதானம்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்கள் நேற்று முன்தினம் கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த 6 கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள பொது இடங்களை சிரமதானம் மூலம் துப்பரவு செய்தனர்.

சாவகச்சேரிப் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பின் பொறுப்பாளர் அலெக்ஸாண்டர் தலைமையில் இச் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. [உ-77]

## சைக்கிள் திருடர் பிடிபட்டனர்

(ஆவரங்கால்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை உடுவில் பகுதியில் இடம்பெற்ற சைக்கிள் திருட்டு தொடர்பாக அவ்வூர் இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்ட இருவர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (உ-57)

## படகு மீது தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதப்படகொன்றை சிறிலங்கா கடற்படையினர் தாக்கியதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு அரை மணித்தியாலம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## விபத்தில் மாணவி காயம்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் சைக்கிள் மோட்டார் சைக்கிள்விபத்தில் மாணவியொருவர்கால் முறிந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ் பல்கலைக்கழகம் இரண்டாம் வருட கலைப்பீட மாணவி விஜி பேரின்பநாயகம் என்பவரே காயமடைந்தவராவார். [இ-5-104]

## முகாம் மக்களுக்கு சுழற்சி முறைக் கடன்

(உடுவில்)

வலி தெற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சபாபதிப்பிள்ளை முகாம் மற்றும் இக்கிராணை முகாம், மட்டக்கட்சி முகாம், பிள்ளையார் முகாம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்கள் சுய தொழிலில் ஈடுபடுவதற்கு யு. என் எச்.சி.ஆர் உதவியுடன் சுழற்சி முறைக்கடன் வழங்கப்படவுள்ளது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களே இக்கடன் உதவிகளைப் பெறத் தகுதியுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-129)

## உறவினரிடையே கைகலப்பு வெட்டுக் காயங்களுடன் மூவர் வைத்தியசாலையில் அனுமதி

(மந்திகை)

உறவினர்களுடன் ஏற்பட்ட கைகலப்பில் வெட்டுக் காயங்களுக்குள்ளான மூவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வியாழனன்று மாலை வல்லிபுரக் குறிச்சியில் நடைபெற்ற சம்பவத்தில், இதே இடத்தைச்சேர்ந்த இராசதுரை இராசரத்தினம் (வயது 41), க. கிட்டிணன் (வயது 52), கிட்டிணன்சிவகுமார் (வயது 19) ஆகியோர் காயமடைந்து மேற்படி வைத்தியசாலையில்சிகிச்சைபெற்று வருகின்றனர். (உ-23)

## மீன் பிடிக்கும் நேரத்தை அதிகரிக்க கோருவதென தீர்மானம்

(யாழ்பபாணம்)

வடமராட்சியில் குறிப்பாக தொண்டைமனாற்றிலிருந்து சக்கோட்டைவரையுள்ளகடல் பிரதேசத்தில் அடிக்கடி இராணுவத்தினரால் மீன்பிடித்தொழில் தடை செய்யப்படுகின்றது.

இதனால் அவர்கள் தங்களது நாளாந்த சீவியத்திற்குப் பெரும் சிரமப்படுகிறார்கள்.

எனவே இது போன்ற தடைகள் இடம் பெறுவதை நிறுத்திதடை விதிக்கப்படும் போது அவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இப் பிரதேசத்தில் மீன் பிடித் தொழிலை மேற்கொள்பவர்களை தினமும் அதிகாலை 2.00 மணியிலிருந்து அடுத்த நாள் காலை 8.00 மணி வரைக்கும், மாலை 4.30 மணியிலிருந்து மாலை 6 30 மணி வரைக்கும் மீன் பிடிக்க அனுமதி வழங்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியையும், மீன்பிடி அமைச்சரையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் கோருவதென்ற தீர்மானம் வல்வை நகராட்சி மன்ற கூட்டத்தில் உபதலைவர் ச.சந்திரசேகரம் பிரேரிக்க, உறுப்பினர் கணேஸ் றொபேட் ரவீந்திரராஜா அனுமதிக்க சபையினரால் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. (உ)

## வங்கி செல்வோர் சைக்கிள்களை நிறுத்த போதிய இடமின்றி சிரமம்

(உடுவில்)

சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக்கு அலுவல்கள் நிமித்தம் செல்லும் வாடிக்கையாளர்கள் தமது சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை போதிய இடவசதியின்றி தெருவில் நிறுத்தவேண்டியுள்ளது.

தினமும் 100 இற்கும் மேற்பட்டோர் இவ் வங்கிக்குச் செல்கின்ற போதிலும் வாகனத் தரிப்பிடத்திற்கு போதிய இடம் ஒதுக்கப்படவில்லை அத்துடன்,

அருகில் இராணுவச் சோதனை சாவடி காணப்படுகிறது. அவற்றினருகில் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டிருக்கிறது.

இதனால் மக்கள் வேறுவசதியின்றி தெருவோரத்தையே வாகனத்தரிப்பிடமாகப்பயன்படுத்தவேண்டியுள்ளது.

அத்துடன் வங்கியில் போதிய இருக்கை வசதிகளும் செய்து கொடுக்கப்படாமையினால் வாடிக்கையாளர் நீண்டநேரமாக கால்கடுக்கக் காத்துநிற்க வேண்டியிருப்பதாக மக்கள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகிறது. (உ-129)

## நகையைத் திருடிய பாடசாலை மாணவன் மாட்டுப்பட்டான்

(மந்திகை)

வீட்டில் ஆட்கள் இல்லாத வேளை திருடிய நான்கு பவுண் நகையைப் பாடசாலையில் விற்க முற்பட்ட மாணவன் அதிபரிடம் வசமாக மாட்டிக் கொண்டான்.

கடந்த செவ்வாய்க்கிழமை தம்பசிட்டி மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

புலோலி வத்தனையிலுள்ள வர்த்தகர் எஸ். ஆனந்தன் என்பவரது வீட்டில் கடந்த 7 ஆம் திகதி 4 தோடும், 3 மோதிரமும் களவு போனது.

அந்த நகைகளை மேற்படி பாடசாலைச் சிற்றுண்டிச் சாலையில் மாணவன் ஒருவன் விற்கமுற்பட்ட வேளை அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதால் உண்மை வெளியாகியது.

அதையடுத்து அதிபர் நகைகளை உரியவர்களை அழைத்து அவர்களிடம் கொடுத்தார். (உ-23)

# அமெ. பல்கலைக்கழகக் குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜனநாயகம், அபிவிருத்தி, இன முரண்பாடு போன்ற விடயங்களை ஆய்வு செய்வதற்காக அமெரிக்க பசோல் பல்கலைக்கழக குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

மனிதநேய அமைப்புக்கள் மற்றும் அரசியல்வாதிகளை சந்தித்து ஆய்வுகளை மேற்கொள்ளவிருக்கும் இக்குழுவினர் கடந்த வியாழன்மட்டக்களப்புமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கத்தைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இதன்போது கருத்துத்தெரிவித்த ஜோசப்பரராஜசிங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். விடுதலைப்புலிகள் பங்குபற்றாத எந்தவொரு பேச்சுவார்த்தையையும் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என தெரிவித்தார். (ந-5)

# பயிற்சியில் ஈடுபட்ட விமானம் வயல்வெளியில் வீழ்ந்துநொருங்கியது

## ஹிங்குராங்கொடவில் சம்பவம்

(கொழும்பு)

ஹிங்குராங்கொடப் பகுதியில நேற்றுமுன் தினம் இரவு பயிற்சியில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேற்படி பயிற்சியில் ஈடுபட்டிருந்த விமானம் திடீரென கரும்புகையைக் கக்கியபடி வயல் பகுதியில் செங்குத்தாக வீழ்ந்து நொருங்கியது.

எனினும், அதில் இருந்த 3 விமானிகளும் உயிர்பிழைத்துள்ளதாக ஹிங்குராங்கொட பொலிஸ் அதிகாரி கமல்கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி பயிற்சி விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றபோதிலும்,

புலிகளின் தாக்குதலுக்கு விமானம் இலக்காகியிருக்கலாம் என்று வெளியான ஊகத்தை மறுப்பதற்கில்லை எனவும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (உ-7)

## திருட்டுப்பொருள் பறிமுதல்

(தென்மராட்சி)

மட்டுவில் பகுதிக்குச் சென்றுவந்த அப்பகுதியைச் சேர்ந்தோர் அல்லாதோர் வசமிருந்த பெருந்தொகைப் பொருட்கள் கைசடிச் சந்தியில் வைத்து ஈ.பி.டி.பியினரால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டன.

வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுவில் சென்று அங்கு ஆட்கள் இல்லாத வீடுகளில் திருடிவந்த தேங்காய் மற்றும் உணவுப் பொருட்களே இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-77)

## பூரான் கடிக்குள்ளான படைவீரர் பலாலியில்

மந்திகை இராணுவ முகாமில் கடமையிலிருந்த வேளை பூரான் கடிக்குள்ளான படை வீரர் ஒருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நலீன் டீப்பால் [வயது 30] என்பவரே பூரான் கடிக்குள்ளானவராவார். (உ-23)

## விளையாட்டு விழா

(மந்திகை)

தென் புலோலி புற்றளை சித்தி விநயகர் பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டு விழா இன்று பி.ப 2 மணிக்கு புற்றளை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலயத் தலைவர் தா. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் பிரதம விருந்தினராகவும்,

மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை, வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன், கிராம அலுவலர் தி. சுபேர்திரராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-23)

## முரண்பாடுகளைத்தீர்த்தல் கருத்தரங்கு புத்தூரில்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையப் பாடசாலை மட்டத்தில் நடத்தி வரும் முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பான சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்கு நாளைதிங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில் யாழ்.புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் தி.ஆறுமுகம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

தேசியக் கல்வி நிறுவக விரிவுரையாளர் திருமதி புஷ்பா சின்னையா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் கலாநிதி சபா ஜெயராஜா, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பாலாம்பிகை சுப்பிரமணியம், தேசிய கல்வி நிறுவகவிரிவுரையாளர் திருமதி தனலக்ஷ்மி வில்வநாதன் ஆகியோர் கலந்து கருத்துரைகளை வழங்குவர். (உ)

## பயிற்சிக் கருத்தரங்கு

[மந்திகை]

புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கான "வெங்காயச் செய்கையும் கிருமிநாசினி உபயோகமும்" என்ற தலைப்பிலான பயிற்சிக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை குரும்பசிட்டி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. (உ-23)

## ஆலயம் சென்ற வயோதிப மாது சடலமாக மீட்பு

(மந்திகை)

கோயிலுக்குப் போவதாக கூறிச் சென்ற வயோதிப மாது பாழடைந்த கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

புலோலி தெற்கைசேர்ந்த சோமசுந்தரம் வள்ளியம்மா (வயது 95) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.

கடந்த செவ்வாயன்று கோயிலுக்குச்சென்றமேற்படி வயோதிப மாது வீடுதிரும்பவில்லை மறுநாள் அப்பகுதியிலுள்ள பாழடைந்த கிணற்றின் அருகில் ஊன்றுகோல் காணப்பட்டதை அடுத்து, கிணற்றில் பார்த்தபோது சடலமாக அவர் காணப்பட்டதாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறைப் பொலிஸார் தகவல் கொடுத்ததை அடுத்து மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை, வடமராட்சி திடீர் மரண விசாரணை அதிகாரி இ கிருபாகரசூரியன் ஆகியோர் முன்னிலையில்சடலம் மீட்கப்பட்டு விசாரணை நடைபெற்றது.

நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பளித்ததுடன் சடலத்தை ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யுமாறும் மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார். (உ-23)

## இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

புத்தூர் வாதரவத்தை பொக்கணைப் பகுதியைச் சேர்ந்த குமாரவேல் சுதாகரன் (வயது 19) என்னும் இளைஞன் கடந்த 13 ஆம் திகதி அந்தணத்திடல் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது கைது தொடர்பாக உறவினரிடம் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாக யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-10)

## எரிக்கப்பட்ட நிலையில் சடலம்

[கொழும்பு]

கம்பளை நுவரெலியாவீதியில் இனம்தெரியாத சடலம் ஒன்று வாகனத்துடன் எரிக்கப்பட்ட நிலையில்கம்பளைப் பொலிஸாரால் நேற்று முன் தினம்மீட்கப்பட்டுள்ளது. [ந-5]

## படகுகளைப் பார்க்க இந்தியமீனவர்கள் 11 பேர் காவலூர் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களில் 11 பேர் நேற்று ஊர்காவற்றுறை சென்று தமது படகுகளைப் பார்வையிட்டனர்.

நெடுந்தீவு, கச்சதீவு கடற் பகுதிகளில் சட்டவிரோதமாக மீன்பிடித்த வேளை கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 மீனவர்கள் கடந்த 13 ஆம் திகதி யாழ் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடற்படையினர் தம்மிடமிருந்து பறிமுதல் செய்த 11 படகுகளையுமாவாரத்தில் ஒரு தடவையாவது சென்று பார்வையிட அனுமதி தருமாறு படகின் உரிமையாளர்கள் யாழ். மாவட்ட மேலதிக நீதவான் சு. பா. சுப்பிரமணியத்திடம் கோரினர்.

அதற்கமைய படகின் உரிமையாளர்களை ஊர்காவற்றுறைப் பொலிஸாரின்உதவியுடன், யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் படகு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவற்றுறைக்கு அழைத்துச் சென்றார்கள். (உ-6)

# உயிரியல்

நேற்றைய தொடர்ச்சி...

**வினா - 2**

1) a.
- நார்கள்:- இருமுனையும் கூம்பிய நீண்டகலங்கள் வல்லுருக்கள்:- கோள வடிவானவை.
- நார்கள:- கல உள்ளிடம் விருத்தியடைந்துள்ளது. வல்லுருக்கள்:- கல உள்ளிடம் ஒடுக்கமானது.
- நார்கள்:- இலிக்னின் படிவு குறைவு. வல்லுருக்கள்:- இலிக்னின் படிவு அதிகம்.
- நார்கள்:- கிளை கொண்ட குழி இல்லை. வல்லுருக்கள்:- கிளை கொண்ட குழிகள் காணப்படும்.

b) இலிக்னின்

| c இரசாயனப் பொருள் | அவதானம் |
|---|---|
| சவ்ரனின் | இளஞ்சிவப்பு நிறம் |
| அனிலின் சல்பேட் | செம்மஞ்சள் நிறம் |

d) காழ்க்கலன், குழற்போலி, காழ்நார், காழ்ப்புடைக் கலவிழையம், உரியநார், நெய்யரிக்குழாய், தோழமைக் கலம்

e)
- ஒதுக்க உணவு குறைக்கப்படுதல்
- நீரின் அளவு குறைக்கப்படுதல்
- உயிர்ப்பான இழையங்கள் இறக்கும்
- தனின் போன்ற கழிவுகள் சேரும்
- தலையிடு குமிழ்களால் காழ்க்கலன் அடைபடும்
- நிறச் செறிவு கூடும்
- வரியமைப்பு தோன்றும்

f)
- உயிரற்றது
- தடித்த சுவருடையது
- சுவரில் சுபரின் ஏற்றப்பட்டது
- நீரைச் செல்ல விடாது
- கலத்திடைவெளி இல்லை
- செவ்வக வடிவான கலங்கள்
- நுண்ணங்கி ஊடுருவலைத் தடுக்கும்

g)
துணை உரியம்
தக்கை மாறிழையம்
தக்கை
துணை மேற்பட்டை

h) **ஒற்றுமைகள்**
- தனிகலப் படையாகக் காணப்படல்
- உயிருள கலங்களாகக் காணப்படும்
- நெருக்கமாக அடுக்கப்பட்ட கலங்களாகக் காணப்படும்
- கலத்திடை வெளி இல்லை
- பீப்பா வடிவான கலங்கள
- வாயுக்களினதும்நீரினதும் அசைவைக் கட்டுப்படுத்தும்
- உள் இழையங்களைப் பாதுகாக்கும்

**வேற்றுமைகள்**
- மேற்தோல தாவரத்தில் வெளிப்புறமாக உள்ள படையாகும். அகத்தோல் உட்புறமாக உள்ள படையாகும்.
- மேற்தோல் புறத்தோலைக் கொண்டிருக்கும் அகத்தோல் புறத்தோலைக்கொண்டிருப்பதில்லை
- மேற்தோலில் சுபரின் ஏற்பட்ட கஸ்பாரியன் பட்டிகை இல்லை அகத்தோலில் உண்டு
- மேற்தோலில் இலை வாய்கள் உண்டு அகத்தோலில் இலை வாய்கள் இல்லை
- மேற்தோலில் வழிக்கலங்கள இல்லை அகத்தோலில் வழிக்கலங்கள் உண்டு
- மேற்தோலில் மாப்பொருள் சேமிக்கப்படுவதில்லை அகத்தோலில் மாப்பொருள் சேமிக்கப்படும்

i. **முதற்பிரியிழையங்களாவன**
a] உச்சிப் பிரியிழையம்
b] இடைப் புகுந்த பிரியிழையம்
c] சிறு கட்டு மாறிழையம்
தொழில்: இவற்றின் தொழிற்பாட்டால் முதல்வளர்ச்சி நிகழ்வதால் தாவர உடல் நீளத்தில் அதிகரிக்கும்

**துணைப்பிரியிழையங்களாவன**
a] தக்கை மாறிழையம்
b] கட்டிடை மாறிழையம்
தொழில்:- இதன் தொழிற்பாட்டால் துணை வளர்ச்சி நிகழ்வதால் தாவர உடலின் சுற்றளவு அதிகரிக்கும்

(அடுத்த சனிக்கிழமைதொடரும்)

## இன்று ஒரு தகவல்

# பெற்றோரும்பிள்ளைகளும்

அப்பாவை விட பிள்ளைகள் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். பொதுவாக பல சந்தர்ப்பங்களில் நாம் இதைப் பார்த்திருக்கிறோம். இது சம்பந்தமான ஆய்வு ஒன்று அண்மையில் நடந்தது. ஹைதராபாத்தில் 'தேசிய மன வளர்ச்சி குன்றியோருக்கான அமைப்பு ஒன்று தேசிய ஊட்டச்சத்து தொடர்பான அமைப்பு ஒன்று, இவ்விரண்டு அமைப்பும் இணைந்து ஒரு ஆய்வு நடத்தினார்கள். ஹைதராபாத் நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் இந்த ஆய்வு நடந்தது.

ஏராளமான இளைஞர்கள், இளம் பெண்கள், பெற்றோர்கள் எல்லோரையும் நேரடியாகப் போய்ச் சந்தித்தார்கள். புள்ளி விவரங்களை சேகரித்தார்கள். அவற்றையெல்லாம்தொகுத்துப் பார்க்கிற போது பல உண்மைகள் தெரிய வந்தன. முப்பது வயதுக்குள் குறைவானவர்களை விட முப்பதிலிருந்து ஐம்பது வயது வரைக்கும் உள்ளவர்களிடம் புத்திசாலித்தனம் அதிகமாக இருக்கிறதாம். 30 வயதுக்கு மேலே உள்ள பிள்ளைகள் அவர்களுடைய அப்பா, அம்மாவை விட அதிக புத்திசாலிகளாயிருக்கிறார்களாம். முப்பது வயதுக்கு கீழுள்ள பிள்ளைகளுடைய புத்திசாலித்தனமும் பெற்றோர்களுடைய புத்திசாலித்தனமும் கிட்டத்தட்டச் சமமாகவேயிருக்கிறதாம். நான் பிள்ளைகள் என்று இங்கே குறிப்பிட்டது ஆண்பிளளைகளைத் தான்.

பெண்பிள்ளை எப்படித் தெரியுமா? 30 வயதுக்குக் குறைவான பெண்களிடம், அவர்களைப் பெற்றவர்களை விட புத்திசாலித்தனம் குறைவாகவே இருந்ததாம். ஓரளவுக்கு நல்ல வருவாய் உள்ள குடும்பங்களில் பெற்றோர்களை விட பிள்ளைகள் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி புத்திசாலிகளாக இருக்கிறார்களாம். வருவாய் குறைவாக உள்ள குடும்பங்களில் இப்படி இல்லை. அது கொஞ்சம் வித்தியாசப்படுகிறது. வருவாய் குறைவான குடும்பங்களில் புதல்விகளின் புத்திசாலித்தனம் மந்தமாகத்தான் இருக்கிறதாம்.

பெற்றவர்களுக்கும்பிள்ளைகளுக்கும் உயரத்தில் ஏதாவது சமபந்தம் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கிறதற்காக இன்னொரு ஆய்வு நடந்திருக்கிறது. பொதுவாகத் தகப்பனாரை விட மகன்மார் உயரமாக இருக்கிறார்களாம் தாயாரும் புதல்விகளும் கிட்டத்தட்ட சம உயரமாகத் தான் இருக்கிறார்களாம். 30 லிருந்து 50 வயது வரைக்கும் உள்ள ஆண்கள் அவர்கள் பெற்றோரை விட அதிக உயரம். 20 லிருந்து 30 வயது வரைக்குமுள்ள இளைஞர்கள் உயரமும் அவர்களின் பெற்றோர்கள் உயரமும் கிட்டத்தட்ட சமம் இவையெல்லாம் அந்த ஆய்விலேயிருந்து தெரிவிக்கப்பட்டுள்ள முடிவுகள்.

இதைக் கேட்டுக் கொண்டிருக்கிறபிள்ளைகள் எல்லாம் கொஞ்சம் கோபமாகப் பார்க்கிற மாதிரி தெரிகிறது. இது வரைக்கும் நீங்கள் சொல்லிக் கொண்டு வந்ததெல்லாம் 20 வயதுக்கு மேலே உள்ளவர்களைப் பற்றித் தானே. 10 வயதுக்குட்பட்ட எங்களைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையென்கிறீர்களா அப்படித் தானே. அது தான் ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டேன். அப்பாவை விடப் பிள்ளைகள் புத்திசாலிகள் என்று. அது உங்களுக்காகத் தான், உங்களைப் போல் இரண்டு பிள்ளைகள் என்ன பேசினார்கள் தெரியுமா? அவர்கள் இருவருக்குமே கணக்கில் 100க்கு 100மார்க் ஒருவன் மற்றவனிடம் நீ எப்படி 100க்கு 100 வாங்கினாய் என்று கேட்டான் அதற்கு மற்றவன் ''நான் கணக்கில் சந்தேகம் வந்தால் வீட்டில் அப்பாவிடம் கேட்டுக் கொள்வேன். அது தான் காரணம்'' என்றான் அதுசரி நீ எப்படி 100க்கு 100 வாங்கினாய் என்று இவன் அவனைத் திருப்பிக் கேட்டான் இதற்கு அவன் ''நான் கணக்சில் சந்தேகம் வந்தால்எங்கள் அப்பாவிடம் கேட்கிறதில்லை அதனாலேதான் 100க்கு 100 வாங்கினேன்'' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன

# பண்ணிசைப் போட்டி பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீபரராஜ சேகரப் பிள்ளையார் கோயில்திருநெறிய தமிழ் மறைக் கழகம் நடாத்திய பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா இன்று பி.ப. 3. 30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வரவேற்புரையை கழக அமைப்பாளர் மா. இராசரத்தினம் வழங்குவார். ஆசியுரையை இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் க. கனகராஜா, யாழ். பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவர் க. தேவராஜா, கவி மாமணிபிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

**பரிசில்கள், சான்றிதழ்கள் பெறுவோர் விபரம் வருமாறு**

ஆரம்பப்பிரிவு:-

ச. துவணிகரா கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம், த. துஷாயினி இணுவில் மத்திய கல்லூரி, ச. யதுகுலன் மெமோறியல் ஆரம்ப பாடசாலை

கீழ்ப்பிரிவு:-

தெ.பவனுஜா யா/ வேம்படி மகளிர் கல்லூரி, அ. அமிர்த சிந்தூரன் இளம்(தொண்டர் சபைஇணுவில்), கு. அனுசன், தி.நெ த.ம.கழகம்

மத்திய பிரிவு:-

ஸ்ரீ. தாரணி யா/இந்து மகளிர் கல்லூரி, வி. ஜிவிதா, யா/ யூனியன் கல்லூரி, ஜெ. வைஷ்ணவி யா/மெமோறியல்

மேற்பிரிவு:

ந: தனசொரூபி கொக்குவில் இந்துக் கல்லூரி, கு ஜெகதீசன் யா/யூனியன் கலலூரி, ச. லக்மன், யா/ யூனியன் கல்லூரி (உ-03)

## பெண் விடுதலை

(வவுனியா)

விடுதலைப்புலிகள் பற்றிய தகவல்களைக் கொடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட இளம்பெண் ஒருவர் நேற்று முன்தினம் வவுனியா மேல்நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்:

1999ம்ஆண்டுயூலைமாதம் 29ந்திகதி வவுனியாபிரமனாலங்குளம் சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பிரதேசத்தைச்சேர்ந்தயூட்அனித்தா (வயது23) என்பவரே வவுனியாமேல்நீதிமன்ற நீதிபதி என்.யோகசிகாமணியினால் விடுதலைசெய்யப்பட்டவராவர். (ம)

# மனித உரிமை பேணுவதில் அரசு அக்கறையாகச் செயற்படுகிறதாம்

## வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலும், பாதுகாப்புக்கு பாதகமானதுமான சூழலும் நிலவும் இன்றைய நிலையிலும், அரசு மனிதவுரிமைகளைப் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்கும் கடப்பாடு கொண்டுள்ளது என்று வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் தெரிவித்தார்.

கடந்தவாரம் பண்டாரநாயக்க சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் மனிதவுரிமை அலுவலர்கள், பிறநாடுகளின் இராஜதந்திரிகள் மத்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மனிதவுரிமை பேணுதல், மனிதவுரிமை மீறல்களைத் தடுத்தல் ஆகியவை தொடர்பாக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றிய இன்றைய நிலையை விளக்குவதே இக்கூட்டத்தின் நோக்கமாக இருந்தது.

மனித உரிமை ஆணைக் குழுவை நிறுவியமை, 1988, 1989, 1990 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற்போதல் பற்றி விசாரணை செய்வதற்கு மூன்று பிராந்திய ஆணைக் குழுக்களை நிறுவியமை சர்வதேச நிலைப்பாடுகளுக்கு ஏற்புடைய விதத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை திருத்தியமைத்தமை போன்ற யாவுமே மனிதவுரிமைகளைப் பேணும் அரசின் நடவடிக்கைகளாகும் என்றும் அமைச்சர் அங்கு தெரிவித்தார். [உ]

### சங்காபிஷேகம்

(ஏழாலை)

அளவெட்டி வெளிவயல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள்தேவஸ்தான சங்காபிஷேகம் இன்று காலை 8. 30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

நண்பகல் மகேஸ்வர பூஜையும், மாலை விஷேட பூஜையும், அம்பாள் திருவீதியுலாவும் கும்பாபிஷேக மலர் வெளியீடும் நடைபெறும். (உ- 12)

## மாதாந்த உதவிப் பணம்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உதவிப் பணம் பெறுவோருக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுகள் கடந்த புதன்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

புற்றுநோய்,மற்றும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர்,இப்பிரதேசசெயலர் பிரிவிலுள்ள தபால், உபதபால் அலுவலகங்களில் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்ளுமாறு தபால் அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.(உ-23)

## அதிர்ஷ்டசாலிக்கு சையிக்கிள் பரிசு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மேற்தரக் கிளையினால் வருடந்தோறும் நடத்திவரப்படும்'சிறுவர்கள் பொன் அரும்புக் கணக்கு'' சீட்டிழுப்பில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவு செய்யப்பட்ட கோண்டாவிலைச் சேர்ந்த தர்ஷனா சிறிதாஸ் என்பவருக்கு நேற்றுமுன்தினம் மேற்தரக்கிளையின் பிரதான பொது முகாமையாளரால் ஒரு சையிக்கிள் வழங்கப்பட்டது. (உ-10)

## யு. என். எச். சி. ஆர் உதவி

(துன்னாலை)

தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளுக்கு யு. என். எச். சி. ஆர். பாடசாலைத் தளபாடங்களை வழங்கியுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், விடத்தல் பளைகமலாசனி வித்தியாலயம் கிளாலி றோ. க.பாடசாலை ஆகியன மேற்படி தளபாடங்களைப் பெற்றுள்ளன. (உ-4)

## வீதிதிருத்தம் இல்லை

[யாழ்ப்பாணம்]

புதிய செமமணி வீதி நீண்டகாலமாகத்திருத்தஞ் செய்யப்படாதுள்ளதால் அவ்வீதியால் செல்லும் மக்கள் சிரமங்களைஎதிர்நோக்கி வருகின்றனர்.

இது குறித்து பெருந்தெருக்கள திணைக்களத்திற்குத் தெரிவிக்கப்பட்டும், இதுவரை எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. [உ-10]

# தியாகிகள் தினத்தில் சமூகப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 19 ஆம் திகதி அனுட்டிக்கப்படவுள்ள தியாகிகள் தினத்தையொட்டி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் வவுனியாவில் சமூகப்பணிகளை முன்னெடுக்கவுள்ளனர்.

வவுனியா ஆதார வைத்தியசாலையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்சி உறுப்பினர்கள் இரத்ததானம் செய்யவுள்ளனர்.

வைத்தியசாலையில் இருக்கும் நோயாளிகளுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பால்மா, பிஸ்கட், குளுக்கோஸ்,சவர்க்காரம் முதலிய பொருட்களை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# ஜனாதிபதியின்செயலாளர் பதவியைத் துறந்தாரா?

## முரண்பட்ட தகவல்கள் வெளியாகின்றன

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி லண்டனிலிருந்தவாறு தனது பதவியை இராஜிநாமா செய்யும் அறிவித்தலை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளாரென்றும், ஆனால்அதனைஇன்னும் ஜனாதிபதி ஏற்றுக்கொளளவில்லை என்றும் அறியப்படுகிறது;

ஜனாதிபதி நீதித்துறையின் உயர் அதிகாரியொருவரின் இராஜிநாமாவைக் குறிப்பிட்டாரென்று அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே பாலபட்டபெண்டி இராஜிநாமாச் செய்துள்ளாரென்றும் கூறப்படுகிறது. (உ)

# மூன்று பிரிவுகளாக ஆக்கத்திறன் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய பாடசாலைகளுக்கு இடையிலான ''புத்துலகிற்கான பாதை'' மாணவர் ஆக்கத்திறன் போட்டி இம்மாதம் 22,23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

★ ஆரம்பப் பிரிவுமாணவர்களுக்கான போட்டிகள் யா. சன்மார்க்கவித்தியாசாலையிலும்,

★ சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் யா. வைத்தீஸ்வராக் கல்லூரியிலும்,

★ கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் யா. வண்ணைநாவலர் வித்தியாலயத்திலும் மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வுகள் நண்பகல் 12 மணி தொடக்கம் பி. ப 5 மணி வரையும், இரண்டாம் நாள் நிகழ்வுகள் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையும் நடைபெறவுள்ளன.(உ-6)

## களஞ்சியம் அமைப்பு

[மந்திகை]

பருத்தித்துறை நகர சபையில் வேலைப் பகுதி களஞ்சியம் அமைக்கப்படவுள்ளது.

மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைக்கப்படவுள்ள இக் கட்டடத்திற்கு சபை நிதியிலிருந்து 30 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கபடுகிறது; [உ-23]

# விசாரணைக் குழு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கடந்த பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக கண்டியில் இடம்பெற்ற வன்முறை மற்றும் ஒழுங்கீனம் சம்பந்தமாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணை அறிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் எஸ். பி. திஸநாயக்காவிடம் கையளித்துள்ளது.

தேர்தலில் இடம் பெற்ற வன்முறை மற்றும் ஒழுங்கீனம் குறித்து விவசாய அமைச்சர் டி. எம். ஜயரத்தினாவும் பிரதி பாதுகாப்பு அமைச்சர்ஜெனரல்அனுருத்த ரத்வத்தையும ஒருவரைப்பற்றி ஒருவர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் முறையீடு செய்திருந்தனர்.

இதனாலேயே இருவரையும் விசாரிக்கவென விசாரணைக்குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இவ்விசாரணைக்குழுவின்அறிக்கையை அமைச்சர் எஸ். பி திஸநாயக்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் சமர்ப்பிக்கவுள்ளார். [இ]

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

**★ அம்மா மீது ஆசை**

உலகையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் வல்லரசு நாடு அமெரிக்கா. அந்நாட்டின் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு.புஷ்ஷை ஆசைக்குட் படுத்திய அம்மணி பற்றி அறிந்ததுண்டா.

புஷ்ஷுக்கு அவரது அம்மா என்றால் கொள்ளை ஆசையாம். சின்ன வயதில் இருந்தே இவர் அம்மா பிள்ளை தான் என இவரது தந்தை கூறியுள்ளார். ஜோர்ஜ் டபிள்யு புஷ் தனது ஒரு மகளிற்கு தனது அம்மாவின் பெயரான ''பார்பரா'' என்பதையே வைத்துள்ளார் என்றால் பாருங்களேன்......

**★ எரிபொருளில்லா ஏறோப்பிளேன்**

ஆட்கள் இல்லாமல் ஓடும் விமானம் பற்றி அறிந்துள்ளோம். ஆனால் தற்போது எரிபொருட்கள் இல்லாமல் ஓடும் விமானங்களும் சந்தைக்கு வந்துள்ள தென்றால் சற்று வியப்புத் தோன்றத் தான் செய்கிறது. சூரிய சக்தியை மட்டுமே எரிபொருளாகக் கொண்டு விமானி இல்லாமல் வானில் ஒருவருட காலத்திற்கு மேல் பறக்கச் கூடிய விமானம் ஒன்றை தற்போது கலிபோர்னிய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

200 கிலோ எடை கொண்ட இந்த விமானம் பூமியில் இருந்து 20 கிலோ மீற்றர் உயரத்தில் பறந்து செல்லக் கூடியது.

அவதானி

## 5 வருடங்களின் முன் கடலில் மூழ்கிய கப்பல் பற்றிய தகவல்கள் வெளிவந்தன

(லண்டன்)

இலங்கையர்கள் உட்பட சுமார் முந்நூறு தென்னாசிய நாட்டவர்களுடன் ஐந்து வருடங்களுக்கு முன்னா மத்தியதரைக்கடலில் மூழ்கிப் போன பயணிகள் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

1996 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மூழ்கிப்போன இக் கப்பல் தொடர்பான மர்மம் துலக்கப்படாதிருந்த நிலையில் இத்தாலியப் பத்திரிகை ஒன்று கடலுக்கடியிலுள்ள இக் கப்பலின் புகைப்படங்களை வெளியிட்டுள்ளது.

சிசிலி தீவின் தென்பகுதியில் சர்வதேச கடற்பரப்பில் சுமார் நூறு மீற்றர் ஆழத்தில் அமிழ்ந்துகிடக்கும் இந்தக் கப்பலுக்குள்ளும், வெளியேயும் மணலில் புதையுண்ட நிலையில் மனித எலும்புக் கூடுகள் காணப்படுகின்றனவாம்.

ஐரோப்பிய நாடுகளுக்கு இக்கப்பலில் சென்ற பல இலங்கைத் தமிழ் இளைஞர்களும் பலியாகநேரிட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## தீவிரவாத தலைவர்களை விடுவிக்குமாறு கோரி காஷ்மீரில் கலகம்

(புதுடில்லி)

இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டஇருகாஷ்மீர் தீவிரவாத இயக்கத் தலைவர்களையும் விடுதலை செய்யுமாறு கூறி காஷ்மீர்மக்கள் கலவரத்தில் ஈடுபட்டுவருகின்றனர்

அடுத்தமாதம் இடம் பெறவுள்ள இந்திய- பாகிஸ்தான் பேச்சுவார்த்தைஇக்கைதிகள் விடுதலை செய்யப்படா விட்டால் பாதிப்படையும் என அவதானிகள சிலர் கருத்துக் கூறியதாக செய்தி ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்ட இளைஞர்கள் பொலிஸார் மீது கைக்குண்டுகளை வீசியதில் 4 பொலிஸார்சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## றுவாண்டாவில்எழுநூறு தீவிரவாதிகள் கொலை 500 பேர் கைது

(ஹிகாலி)

றுவாண்டா இராணுவம் கடந்த மூன்று மாத காலத்தில் 700 தீவிர வாதிகளை கொலை செய்ததோடு 500 தீவிரவாதிகளைக் கைது செய்துள்ளதாக அந் நாட்டு அரச கணக்கெடுப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, அரச தரப்பின் இழப்புக்களை அரசு மறைத்து வருவதால் பொது மக்கள் அரசுக்கெதிரான கலகங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்கலகத்தினால் பாரதூரமான யுத்தம் எந்நேரமும் வெடிக்கலாம்எனறுவாண்டா நாட்டு மக்களிடம் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-7)

## முஷாரப்பின் இந்தியப் பயணம் ஜுலைமாதத்தில்

(சென்னை)

இந்தியப்பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பாகிஸ்தான் இராணுவஆட்சியாளர் முஷாரப அடுத்த மாதம் ஒனபதாம் திகதியளவில்இந்தியாவுக்குச்செல்வார் என பாகிஸ்தான் செய்தித் தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரக அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் முஷாரபபின் இந்திய விஜயம் ஜுலை மாதம் முதலாம் அல்லது இரண்டாம் வாரத்தில் இடம்பெறும் என்றும் விஜயத்திற்கான திகதி பற்றி ஓரிரு நாட்களில் அறிவிக்கப்படும் எனவும் கூறியுள்ளார் என்று தெரியவருகிறது. (உ-8)

# மணற்காட்டில்மணல் ஏற்ற ஒரு வாரத்திற்கு அனுமதியில்லை

(மந்திகை)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் மணல் ஏற்றுவதற்கென அனுமதி ஒரு வாரத்திற்கு இடைநிறுத்தப் பட்டுள்ளதாக பருத்தித் துறை பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கில்மணல் ஏற்ற உழவு இயந்திரங்கள் செல்வதால் வாகனப் போக்குவரத்தில் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அத்துடன் வடமராட்சி கிழக்கு வீதி திருத்த வேலை நடைபெற்று வருகின்றது.

எனவே நெருக்கடிகளை தவிர்க்கும் பொருட்டு இன்று தொடக்கம் 23 ஆம் திகதி வரை மணல் ஏற்றுதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் குறித்து அப்பகுதி மக்கள்முன்பு பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மணல் ஏற்றும் உழவு இயந்திரங்கள் செல்வதற்கு மாற்றுவழி அமைப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## சீவல் தொழிலாளர் மீது நடவடிக்கை

(கோப்பாய்)

அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேலாக, சட்ட விரோதமாக பனை சீவும் சீவல் தொழிலாளர்கள் விடயத்தில் கோப்பாய் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாய் அறியப்படுகிறது.

எல்லாச் சீவல் தொழிலாளர்களும் வாய்ப்புப் பெற வேண்டும் என்பதற்காக இச் சங்க எல்லைப்பரப்புக்கு உட்பட்ட சீவல் தொழிலாளர்களுக்கு பனை பகிர்ந்தளிக்கப் பட்டது.

சிலர் இதை மீறிச் செயற்படுவதனால் பெரும் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. (உ-79)

## சுகாதார வார கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் 'சுகாதாரவாரக் கண்காட்சி' எதிர்வரும்19, 20 ஆம் திகதிகளில் கல்லூரிமுதல்வர் அ ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணச் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர்வைத்திய கலாநிதி செல்விஉமாசிவபாத சுந்தரமும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதிசெ.இந்திரராஜாவும் கௌவர விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரமும் கலந்து கொள்ளவுள்ளனர். [உ]

## விஷு புத்தாண்டில்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மான லாப முன்னேற்றம், தொழில் விருத்தி, பின்னர் நன்மை குறையும்.

**மாணவர்களுக்கு:-**

கல்வித் தேர்வு விஷயம் 2001 யூன் வரை சிறப்பாக இருக்கும். பின்னர் நன்மை குறையும்.

**இளைஞர், பெண்களுக்கு:-**

2001 யூன் வரை அரச தொழில் மற்றும் தொழில் முயற்சி லாபம் உள்ளது. விவாகம் தடங்கலாகும். ஆனியின் பின்னர் மத்திம நம்மை விளங்கும்.

**தொழிலாளர்களுக்கு:-**

2001 யூன் வரை நல்ல வருமான முயற்சி லாபம் விளங்கும். பின்னர் முயற்சி கூடி வருமானம் சமாளிக்கப் பலன் உள்ளது.

**முதியோருக்கு:-**

ஆனிமாதம் வரை தேக சுக விருத்தி அமையும். பின்னர் மத்திம சுக லாபம் உள்ளது.

(தொடரும்)

## மரத்தால் வீழ்ந்தவர் அறிவிழந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தென்னை மரத்தில் ஏறி ஓலை பிடுங்கிய சமயம் தவறி வீழ்ந்த திருநாவுக்கரசு ராஜ்குமார் (வயது 21) மயக்கமடைந்த நிலையில் நேற்று மதியம் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (உ-10, 6)

## களவு போன மோட்டார் சைக்கிள் விபரம் தருவோர்க்கு 50ஆயிரம் ரூபாசன்மானம்

(யாழ்ப்பாணம்)

களவு போன மோட்டார் சைச்கிள் தொடர்பான விபரங்களைத் தருபவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும என யாழ் பொலிஸ் நிலைய அதிகாரி குடாஹெட்டி அறிவித்துள்ளார்.

களவு போன பொருட்கள் தொடர்பான விபரங்களை தெரிந்தவர்கள் எந்தவித அச்சமும் இன்றி தம்மிடம் வந்து தெரிவிக்கலாம் என்றும்,

பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப சன்மானம் வழங்கப்படும் எனவும் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (உ-10,6)

## வடக்கு-கிழக்கு பதில் அதிபர்களின் விபரம் அனுப்பிவைப்பு

(கோப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றும் 836 பேருடைய விபரங்கள் மாகாணக் கல்வி அமைச்சினால் மத்திய அமைச்சுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இந்த விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டதும் மாகாணக் கல்பித்திணைக்களத்தினால் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்படுமென கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேபோன்று பதில் உதவிக்கல்விப் பணிப்பாளர்களாகக் கடமையாற்றுவோருடைய விபரங்களும் மத்திய அரசினால் மாகாண அமைச்சிடம் கோரப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் 3 ஆயிரம் பேர் பதில் அதிபர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்து விட்டதாகவும்.விரைவில் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். [உ-79]

## பரு. நகரத்தில் பயணிகள் இளைப்பாற்று மண்டபம்

(மந்திகை)

பருத்தித்துறை நகரத்தில் பயணிகளுக்கான இளைப் பாற்றுமண்டபம்அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நகரசபை உபதலைவர் நா. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் மாகாண அபிவிருத்தி நிதியிலிருந்து ஒதுக்கப் பட்டுள்ள 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இம் மண்டபம் அமைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அடிப்படைவசதிகளுடன் கூடிய இம்மண்டபம் எதிர் வரும் யூலை மாதம் முடிவடையமுன் மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## இனம்காணப்படாத சடலங்களின் இரத்தக்கறை மாதிரிகள் இந்தியாவுக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலையில் அடையாளம் காணப்படாத சடலங்களின் இரத்தக்கறை மாதிரிகள் இந்தியாவிற்குஇரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் கமல சபேசன், பிரதம நீதி அரசர் சரத் என். சில்வாவிற்கு சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப் பட்ட விசாரணையில் இருந்து 47 சந்தேக நபர்கள் உட்பட 200 இற்கும் மேற்பட்டவர்களின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டதாகவும்,

அத்துடன் 41 சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

பற்றுள்ளம் என்னும்
இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப்படுவதொன்(று)
அன்று
குறள்

# வலம்புரி

## சுருதி குறைகிறது!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதானக்கதவுகள் திறந்திருப்பதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார். அத்துடன் சமாதானக் கதவு எந்நேரமும் திறந்திருக்காது என்ற கருத்தும் அவரிடமிருந்து வெளிவந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்தத்தின் மூலம் தோற்கடிக்க வேண்டுமென்ற கொள்கையில் விடாதபிடி என்று பத்தாயிரம் பேரைப் படைக்குச் சேர்க்கப் போய் படு தோல்விகண்ட பிரதமர் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகவும் அதனைத் தடைசெய்ய வேண்டுமெனவும் குரல் கொடுத்த பிரதமர் இன்று விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்திருப்பது அவரின் சுருதி குறைவடைவதையேகாட்டுகிறது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சோல்ஹெய்மை வாய்க்கு வந்தவாறு தூற்றிய பிரதமர் இப்போது விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுவது, சில வேளைகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசு ஆட்டம் கண்டு விடுமோ என்றஅச்சத்தின் காரணமாக இருக்கலாம்

அல்லது பத்தாயிரம் பேரை படைக்குச் சேர்க்கப் புறப்பட்ட பயணத்தின் தோல்விதந்தஞானம் உண்மையைப் புலப்படுத்தியிருக்கலாம். எதுவாயினும் விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தைக்குவருமாறு அழைப்பு விடுத்தது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காஎன்பது நம்பமுடியாத உண்மை.

பிரதமரின் இவ் அழைப்பு அவரினால் விடுக்கப்பட்டதொன்றல்ல. ஏற்கனவே ஜனாதிபதி, அமைச்சர் டி. எம். ஜயரட்ணா உட்பட பலரும் கோரியுள்ளனர். ஆனால் இவர்களின் கோரிக்கைகளெல்லாம் சர்வதேசத்தின் கண்களில் மண்ணைத் தூவும் ஓர் வினோத நாடகமேயொழிய உள்ளார்ந்தமானதாக இருக்க முடியாது.

பிரதமரின் அழைப்பும் தன் மீது சர்வதேசம் கொண்டுள்ள ஒரு வகையான பார்வையைத் தடுப்பதற்காகவே விடுக்கப்பட்டதெனக் கருதுவதற்கும் இடமுண்டு.

---

### பரமபிதா காட்டிய பாதை

# யேசுவைப் பாலகன் வடிவில் அரவணைக்கும் பாக்கியம் பெற்றவர் புனித அந்தோனியார்

### வி. பிரான்சீஸ்



கோடி அற்புதர் - பதிதரின் சம்மட்டி - வரப்பிரசாதங்களின் வற்றாத ஊற்று எனப் போற்றப்படும் புனித அந்தோனியாரின் திருவிழாவை உலக மக்கள் அனைவரும் கொண்டாடி வருகின்றனர். புனித அந்தோனியார்போர்த்துக்கல் தேசத்தில் லிஸ்பன் நகரில் 1195 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ந் திகதி பிறந்தார். புனித அந்தோனியாருக்கு இறைவன் கொடுத்த விஷேச வரங்கள், கொடைகள் ஆகியவற்றால் அவர்புகழுடன் நம் மத்தியில் வாழுகின்றார். புனிதராகப் போற்றப்படுகின்றார். புனித- அந்தோனியார் 1231 ஆம் ஆண்டு ஆனி மாதம் 13 ந் திகதி தேவனுடைய மறுமைக்குள் பிரவேசித்தார். அடுத்த வருடத்திலேயே ஏனைய புனிதர்களுக்குக் கிடைக்காத புனிதர் பட்டம் கிடைத்தது. புனித அந்தோனியார் சிறுவயதிலேயே துறவியாக எண்ணம் கொண்டு பெற்றோர், உற்றார் உறவுகளை, செல்வ சுகபோகங்களைத் துறந்து புனித - அகுஸ்தீனார் மடத்தில் சேர்ந்து துறவறம் பூண்டார்.

**தியானவழியில்**

மன்னர் யேசுவின் இரத்தப் பலியைக் கருத்தில் கொண்டு இயேசுவுக்காக இரத்தம் சிந்தும் புனித - பிரான்சிஸ்கு சபையில் சேர்ந்தார். அங்கு ஒரு மறைந்த வாழ்க்கை வாழ்ந்து பக்தி நெறியில் தியான வழியில் தாழ்ச்சி, பிறசிநேகம், கீழ்ப்படிதல், ஆகிய குணங்களுடன் திகழ்ந்தார். ஒரு நாள் இவருடைய அறையில் பிரகாசமான வெளிச்சம் தென்பட்டது. சபையைச்] சேர்ந்தவர்கள் பார்த்தபோது அவருடைய அறையில் புஸ்தகத்துடன் அணைத்தவாறு குழந்தை வடிவில் இயேசு காட்சி கொடுத்ததைக் கண்டனர்; குழந்தைஇயேசுவின் வழியாக மக்களுக்கு கோடிக் கணக்கான புதுமைகளைச் செய்து வருகின்றார் புனித அந்தோனியார்!

**புதுமைகள்**

புனித - அந்தோனியார் செய்து வரும் புதுமைகளில் 13 புதுமைக்கு மேல் செய்யப்படாது என மடத்து அதிபரினால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஒருநாள் புனித அந்தோனியார் 13 புதுமைகளைச் செய்து விட்டு வரும்போது மாடிக் கட்டடத்திலிருந்து ஒருவன் கீழே விழுவதைக் கண்டார். அவனை அப்படியே ஆகாயத்தில் நிறுத்தி விட்டு மடத்து அதிபரிடம் ஓடி வந்து சொன்னார். அப்போது மடத்து அதிபர் நீர் இப்போது செய்ததும் புதுமைதானே என்று கூறி தொடர்ந்து புதுமைகளைச் செய்யும்படி கூறினார். பரிசுத்த திவ்விய நற்கருணையில் கிறிஸ்து எழுந்தருளி இருப்பதைப்பிறசமயத்தவர்கள் நம்ப மறுத்தபோது தாமே திவ்விய நற்கருணையை கரத்தில் ஏந்தி கழுதையின் முன்பாக வந்தபோது. அந்தக் கழுதை நற்கருணைக்கு முன்பாக சிரம் தாழ்த்தி, கால்களை மடித்து வணங்கி நின்றது மறுத்தவர்கள் இந்தக் காட்சியைக் கண்டு மன முருகினார்கள். புனித - அந்தோனியார் பிறந்த இடமான லிஸ்பன் நகரில் இவரின் தந்தையார் செய்யாத குற்றத்திற்காக கொலைக் குற்றம்சாட்டப்பட்டு மரணத்தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனால் தந்தைக்கு ஏற்பட்டஅவதூறைப் போக்க லிஸ்பன் நகரில் புதுமையாகக் காட்சி கொடுத்து மரண தண்டனையைத் தடுத்தார் கடல் கொந்தளிப்பையும் பேய் மழையையும் அடக்கினார். இன்னும் எத்தனையோ புதுமைகளைப் பக்தர்களுக்குச் செய்து வருகின்றார். ஆகவே புனித - அந்தோனியார் ஆலயங்களுக்குச் செல்லும் அடியார்கள் அவரின் ஆசிகளையும் அருளையும் பெறுவார்களாக!

★ (இன்று மானிப்பாய் புனித அந்தோனியார் திருவிழா)

---

### சோதிடபலன்

# விஷு புத்தாண்டில் இராசி மாறும் கிரகங்கள் தருகின்ற பலன்கள் நல்லவையா? தீயவையா?

### சோதிடஞானி சண்.மாஸ்டர்

**கிரகமாற்றம் - விஷு புத்தாண்டு**
**2001, ஏப்ரல் - 2002 ஏப்ரல்**
சனிமாற்றம் 11 - 04 - 2001
வியாழன் (குரு) மாற்றம் 13 - 06 - 2001
ராகு, கேது மாற்றம் 19 - 02 - 2002

**மேடராசி**
**(அச்சுவினி, பரணி கார்த்திகை, 1)**

மேடராசி அன்பர்களுக்கு குரு ஜூன், 13 இல் இரண்டாம் இடத்திலும், பின்னர் சனி 3ஆம் இடமாகவும், சனி ஏப்ரல், 11 வரை லக்னச் சனியாக மேடத்திலும், ஏப்ரல் 12 இல் இருந்து இடபத்திலும் அமைந்து பலன் செய்வார்கள். குருவின் பலனால் ஜூன் 13 வரை வாழ்வில் நல்ல மாற்றங்கள் நடந்து வரும். தொழில் முயற்சி, உத்தியோகம், வருமானஇலாபங்கள், காணி வீடு சேரல், அவற்றால் நன்மை, வாகனசுகம் பலருக்கு அமையவுள்ளன. கல்வித் தேர்வு நன்மை உள்ளது; விவாக நன்மை உள்ளது. விவாக நன்மையைத் தடையுடன் சிலர் அடைவார்கள்; வியாபார விஷயங்கள் நல்ல முன்னேற்றம் தரும். குடும்பத்தில் பண விருத்தி, ஆடை, ஆபரணச் சிறப்பு, வெளிநாட்டுப் பயணம் தோன்றும். கடன் மீளும். நோய் குணமாகும். காதல், நட்பு, பெண்கள் தொடர்பான விடயங்களால் நன்மை பெறுவார்கள். புகைத்தல் பழக்கம், மது, ரேஸ், போதை, உல்லாசம் போன்றவை சாதகமாக அமைவதால் சிலர் அனுபவித்து நட்டமடைய வேண்டி வரும். பதவி, மதிப்பு சிலருக்கு வாய்க்கும். சகோதரங்களுக்கு செலவினங்கள் அமையும். தாயாருக்கு நன்மையும், சிலசமயம் அலைச்சலும் தோன்றும்; வழக்கு வெற்றி கிடைக்கும். தகப்பனுக்கு வழக்கு, கடன், ரோகம் அமையும்; ஜூன்மாதம் 13 இல் இருந்து குரு 2 ஆம் இடமாக அமைவதால் வாழ்வில் சிக்கல்கள், பிரச்சினைகள் சில சமயம் உண்டாகும். கணவன் மனைவிக்கு கடன் பிரச்சினை, மனக்குழப்பம், ஓய்வில்லாமை இருக்கும். தொழில் வருமானத் தடங்கல் சிலருக்குத் தோன்றும். விவாக நன்மை தடைப்படும், விவாகம் வாய்ப்பாகி வரும் போது இதேகாலம் நன்மையாக இராது. பண விடயங்களில் பொறுப்புப்பிணை போதல் சிக்கல் தரும்; தற்காலிக சுயதொழில் லாபம் வரும். கைவிடப்பட்ட மாதிரியான மனநிலை விளங்கும். பலருக்குச் செய்யும் காரியங்களில் பிரச்சினை தோன்றும் வெளிநாட்டுப் பயண விஷயம், பிரயாணத் தடை இடைத்தங்கல் மற்றும் பணப் பிரச்சினை ஏற்படுத்தும்.

2002 சித்திரைவரை அதிக செலவுடன் பயணலாபம் அடைவர். கெட்ட பழக்கங்கள், கெட்டவர்சேர்க்கை மிகவும் சிக்கலைத் தந்து, சிலரைக் கஷ்டத்தில் தள்ளிவிடும். குழந்தை நன்மை உள்ளது; சனீஸ்வரன் பலன் ஏப்ரல் 11 வரை லக்கினத்தில் ஏழரை நடுக்கூறு ரோகம், கவலை, அலைச்சல், மனக்குழப்பம் போன்ற பலன்கள் இருந்து வரும். இடமாற்றம், வேறுதொழில் விருத்தி தோன்றும்.

ஏப்ரல் 12 இல் இருந்து 2 இல் சனியின் பலனால் இடமாற்றம், பிரயாண லாபம், குடும்பத்தகராறு, சுகக்குறைவு, வாகனப்பிரச்சினை, உணவுத்தடை, கடன் சிரயம் ஆகியவை சிலருக்கு நடக்கும். $7\frac{1}{2}$ சனி கடைக்கூறு படிப்படியாக நன்மைகள் அந்நியர் ஆதரவு உதவிகள். தோன்றி வரும்; சிலருக்கும் பிறரின் வாகனம் லாபமாகக் கிடைக்கும்.

ராகு. கேது பலன்:- 2001 டிசம்பர் வரை ராகு 3 இல் கேது 9இல் இருந்து 2002 இல் முறையே2 ஆம் இடம் 8ஆம் இடமாக இடமாறுவர். ராகுவினால்கல்வி விருத்தி தொழில் லாபம், பயணங்கள் உணவுச் சிக்கல் அமைதலும்கேதுவினால் குடும்பத் தகராறு, தெய்வலாபம், தகப்பனுக்கு அலைச்சல், தாயாருக்கு ரோகம் தோன்றும். 2002 இல் இராகுவினால் குடும்பச்சச்சரவு, அதிர்ஷ்டம், பணவிருத்தி நிலவும் 3 இல் கேதுவால் தொழில் மாற்றம் வழக்கு வெற்றி சத்துரு லாபம் ஏற்படும்.

மற்ற கிரகங்கள் பலன்:- 2001 புரட்டாதி வரை- காணி, வீடு. லாபம், விவசாய விருத்தி, கணக்கு காரியங்களால்வருமானம், வாகன நஷ்டம், சத்துருலாபம், குடும்பப்பிரச்சினை, அலைச்சல் தோன்றும். ராஜமரியாதை ஆன்மீக எண்ணம் உறவினர் உதவி, வியாபார முயற்சியால் முன்னேற்றம் புத்திரர்க்கு லாபம், கடன் தொல்லை. மதிப்பு வீட்டைப் பிரிதல் விஷயம் அமையும். அலங்காரச் சிறப்பு, பணவிருத்தி, வாசனசுகம், காதல், சிநேகிதம், உணவு நன்மை உண்டாகும். சிலருக்கு வாய்வு ரோகம், வியாபார விருத்தி அமையும்.

**ஐப்பசி முதல் 2002 சித்திரை வரை:-**

தொழில் சிறப்பு, காணி, வீடு, வாகனநன்மை, பிரயாணலாபம், பதவியுயர்வு, நண்பர் கூட்டம், நீராடல், உல்லாச விஷயம் நன்மையாக இராது. (ஐப்பசி மார்கழி) பணவிருத்தி, பெண்கள் நன்மை தொழில் வருமானம் (2001 ஆனிவரை) கல்வி, தேர்வு, கலைத்துறை நன்மை, ஆடை ஆபரணச் சிறப்பு, வாகன சுகம் போன்றவை நன்மை தரும்; பதவி உயர்வு, வெளிநாட்டுப்பயண வெற்றி, இடமாற்றம், புத்திர லாபம் தோன்றும்.

**உத்தியோகத்தர்களுக்கு:-**

ஜூன் வரை தொழில் நன்மை பதவி உயர்வு, ஜூனுக்குப் பின்னர் இடமாற்றம், தொழில் சிரமம் உள்ளது;

**வியாபாரிகளுக்கு:-**

யூன் மாதம் வரை வரு

(6-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில் கடமையாற்ற டாக்டர்கள் முன்வரவேண்டும்

## இராணுவத்தளபதி பலகல்ல அழைப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் சேவையயாற்று தவற்கு வைத்தியர்கள் முன்வர வேண்டுமென்று இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் லயனல்பலகல்ல அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில். நேற்று முன்தினம் இலங்கை மருத்துவக் கல்லூரியின் ஆதரவில் இடம் பெற்ற இரு நாள் கருத்தரங்கில் உரையாற்றும் போதே பலகல்ல மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் யுத்தம் நடை பெறும் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளில் நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவே உள்ளது.

எனவே அப்பகுதியில் கடமையாற்ற வைத்தியர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றனர். ஆனால் அப்பகுதிகளில் கடமையாற்றும் வைத்தியர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர்.

இந்நிலையில் வடக்கு கிழக்கில் பணியாற்ற வைத்தியர்கள் முன்வரவேண்டும். அவ்வாறு வைத்தியர்கள் சேவையாற்ற முன்வருவார்களெனத் தாம் நம்புவதாகவும் பலகல்ல மேலும் தெரிவித்தார். (இ)

### சடலம் ஒப்படைப்பு

(கொழும்பு)

வந்தாறு மூலையில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் உயிரிழந்த விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் கடந்த 15ம் திகதியன்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ந-9)

# யாழ். வைத்தியசாலையில் நோயாளர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் கடந்த ஐந்து நாட்களாக மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதை அடுத்து நேற்று வைத்தியசாலையின் சகல பணிகளும் வழமைக்குத்திரும்பியுள்ளது.

இதனை அடுத்து கடந்த ஐந்து நாட்களாக வெறிச்சோடிக்காணப்பட்ட வெளி நோயாளர் பிரிவு, மற்றும் கிளினிக்குகள் யாவற்றிலும் நோயாளர் நிரம்பிவழிந்ததை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை தனியார்வைத்தியசாலைகளிலும் வைத்திய பரிசோதனை கணிசமான அளவு இடம்பெற்றுள்ளது. (வ)

## ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மற்றும் அரியாலைப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் பூநகரி, கல்முனைப்பகுதிகளை நோக்கி நேற்றுமாலை 5-30 மணியளவில் பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. [வ]

## கொழும்பில் தேடுதல் ஏழு பெண்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு காவத்தைப்பகுதியில் நேற்று இடம்பெற்ற திடீர்தேடுதல் வேட்டையின் போது ஏழு தமிழ் பெண்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 7 பெண்களிலும் 3 பேர் கந்தளாயையும், ஏனையோர் வட பகுதியையும் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

கடந்த 15 ஆம் திகதியன்று சாவகச்சேரி மற்றும் மீசாலைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது மோட்டார் குண்டு மற்றும் 1.5 கிலோகிராம் எடையுடயை வெடிமருந்து என்பன கைப்பற்றப்பட்டுளளதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-9)

### ஆட்சியை ...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் கோரிக்கைகளை அரசாங்கம் புறந்தள்ளி நிராகரித்து வருவதனால் அரசுக்கும் தமக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தெரிவிக்கையில் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தேன்; அவருடன் எமது கட்சியின் நிலைப்பாடு தொடர்பாக விளக்கியிருந்தபோதும். முடிவுகள் எதுவும் எட்டப்படாத நிலையாலேயே பேச்சுக்கள் முடிவடைந்தது.

எமதுகட்சிக்குள் தலைமைத்துவம் பிரச்சினையை ஏற்படுத்திக் கட்சியை சிதறடிக்க அரசாங்க கட்சியில் சிலர் முனைப்புடன் செயற்படுவதை நாம் அறிந்துள்ளோம்

இந்நிலையில் அரசுக்கும் எமக்கும் இடையிலான உறவு மந்தமாகவே உள்ளதென்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்,

இதேவேளை கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் மகியபாலஹேரத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்குமென அவர் தெரிவித்துள்ளார்.

அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரசின் இத்தகைய நிலைப்பாடுபொதுஜன ஐக்கிய முன்னணி அரசை ஆட்டம்காண வைக்குமென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம்காங்கிரஸ் தலைமைப்பீடத்திற்கு எதிராக எடுக்கப்படும் எந்தவித சவாலுக்கும் முகம்கொடுக்க நான் தயாராக உள்ளேன். அரசாங்கத்தின் தரகர்கள் கிழக்கில் இருந்து நூறுபேரைக் கொண்டுவந்து ஆர்ப்பாட்டம் நடத்தியது பற்றி நான் எதுவும் செய்யப்போவது இல்லை;

அரசாங்கத்தின் தரகர்கள் கட்சிக்குள் இருப்பதாகவும் அவர்களை விரைவில் களை எடுப்பேன் என்றும் அமைச்சர் ஹக்கிம் ஆவேசத்துடன் கூறியதுடன் ஹிஸ்புல்லா மறைந்த தலைவர் அஸ்ரப்பினால் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டாரென்றும் தெரிவித்தார். [வ-இ]

### பஸ்விபத்தில் ...

ளானதில் இருபத்திரண்டுபயணிகள் காயமடைந்துள்ளனர்

நேற்று முன்தினம் இரவு கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து களுவாஞ்சிக்குடி நோக்கிபுறப்பட்ட ஈஸ்ரேன் கம்பனிக்கு சொந்தமான பஸ்ஸே நேற்று அதிகாலை 1.30 மணியளவில் விபத்துக்குள்ளானது.

இந்தவிபத்தில் காயமடைந்தவர்களில் ஐந்து பேரின் நிலமை கவலைக்கிடமாகஉள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

### ஜோர்தான் ...

கடந்த 7ந் திகதி அங்கு இறந்து விட்டதாகத் தெரிவித்து கடந்த 14ந்திகதி சடலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது நஞ்சூட்டலால் மரணம் ஏற்பட்டதாக சட்ட வைத்திய அதிகாரி எஸ். வி. பத்ரண தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரஸ்தாப பெண்ணின் மரணம்தொடர்பாக இம்மாதம் 31ந் திகதிக்குள் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேலைவாய்ப்பு பணியகம் ஜோர்தானிலுள்ள இலங்கைத்தூதரகத்தைக் கேட்டுள்ளது. (இ)

# ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற இலங்கையர்கள் திருப்பிஅனுப்பப்படுவர்

## ஒன்றியத் தலைவர் இல்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுககுச் சென்று அங்கு வசிப்பவாகளை இலங்கைக்குத் திருப்பியனுப்ப ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையர்களை ஐரோப்பாவிலிருந்து பாதுகாப்பாக திருப்பியனுப்புவது குறித்து இலங்கைஅரசுடன் ஆராய்ந்து வருவதாக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் இல்கா உசிடலோ தெரிவித்துள்ளார்.

பல்லாயிரக்கணக்கானஇலங்கையர்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் வாழ்வதாக இல்கா உசிடலோ மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கானஐரோப்பிய ஒன்றியபிரதிநிதிகள்குழுவின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் தாஜ்சமுத்திராஹோட்டலில் கருத்தரங்கொன்று நடைபெற்றது. இக் கருத்தரங்கிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இலங்கையின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணிப்பதும். அவை சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிப்பதுமே இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவின்முக்கிய பணியென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் சமாதான மேசைக்கு கொண்டுவருவதற்கு நோர்வே எடுத்துவரும் முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது முழுமையான ஆதரவைவழங்கும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தாததாகவும் சிறுபான்மை மக்களின் துயரங்களுக்கு உரிய தீர்வை அளிப்பதாகவும் அமைய வேண்டுமெனவும் ஐரோப்பிய ஒன்றிய தலைவரால் சுட்டிக் காட்டப்பட்டது. (இ)

# ஆள்தெரியாமல் சுட்டதில் ஆறு படையினர் காயம்

## வவுனியாவில் சம்பவம்

[கொழும்பு]

வவுனியாவில் நேற்று அதிகாலை படையினருக்கிடையே ஏற்பட்ட தவறுதலான துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஆறு இராணுவத்தினர் காயமடைந்துளளனர்.

வவுனியாப் பகுதியில் இரு குழுக்களாகச் சென்ற இராணுவத்தினர் ஒருவரை ஒருவர் இனங்காணாமல் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்திலேயே இவ் ஆறு இராணுவத்தினரும் காயமடைந்துளளனர். இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகிறது. [ந-9]

### பொதுநலவாய ...

விளக்கிக்கூறியிருந்தார்.

இதனை அடுத்தே ஜோன் டைவேர்ஸ் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக யோசப் பரராஜசிங்கம் எம்.பிக்கு கடிதம எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தை பொதுநலவாய அமைப்பு நாடுகளின் தலைவர்கள மாநாட்டில் ஆராயப்படவேண்டுமென, அவுஸ்திரேலியவெளிவிவகார அமைச்சர் அலெக்ஸாண்டர் டவுனர் மற்றும் பொதுநலவாய நாடுகள அமைப்பின் செயலாளர் நாயகம் ஆகியோரை தான் கேட்டுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார், [வ

## மரண அறிவித்தல்

### திருமதி திரேசம்மா பாக்கியநாதர்

நெடுந்தீவைபபிறப்பிடமாகவும் இல 36,5ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி திரேசம்மா பாக்கியநாதர் 12.06.2001 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் யோசேப் பாக்கியநாதரின் அன்பு மனைவியும், காலம்சென்றபேனாட் கதிர்காமர், சுப்பிரமணியம் [வர்த்தகர் வவுனியா] ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிளிஸ்டியோசெப [முன்னாள துறைமுக அதிகார சபை உததியோகததரும, அகில இலங்கைச் சமாதான நீதவானும] காலம சென்ற அன்ரனி [உதவிக் கல்விப் பணிப்பாளர்] இமானுவேல [அபுதாபி] காலம்சென்ற தோமஸ் [பொறியியலாளர்] காலமசென்ற இரஞ்சினி ஜேயஸ் [கனடா] மரியஜசிந்தா [டெல்கி] மரிஸ்ரெலா மரியமலர் ஆகியோரின்தாயாரும் ஸ்ரெலா, புஸ்பம் அன்ரனி [ஓயவுபெற்ற அதிபர்] பெனடிற், பரமேஸ்வரி [அதிபர் நெடுந்தீவு] சரஸ்வதி [கனடா] மரியதாஸ், மெதோடியஸ், மரியநாயகம், தியாகராசாஆகியோரின் அன்பு மாமியாரும் மன்னார் ஆயர்—இராயப்புயோசப் ஆண்டகை அருளன்னை புஸ்ப்பம [திருக்குடும்பம கன்னியர் சபை-இந்தியா] ஆகியோரின் சிறிய தாயாரும் அருட்சகோதரி டோமினிக், அருட்சகோதரி பிலோமினா ஆகியோரது மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 18-06-2001 திங்கட் கிழமை மாலை 4 மணிக்கு புனித அடைக்கல மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றபபட்டபின் கொஞ்சேஞ்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுககொளளவும்,

இல. 36,5ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

தகவல்-
யோ.பாக்கியநாதர்
(கணவர்)

(326L)


**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

அர்ஜுன், அபிதா
பிரகாஷ்ராஜ்
நடித்த

**வானவில்**

தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30 [பு. நே]
(3222)



30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாகத் தயாரிக்கப்பட்டது;

சுத்தமான

**வி.எஸ்.பி, நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும், ஏகவினியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1986)


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.